**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | | Filing No. CRLMP 4606 of 2023 |

Depositions of PW - 1 witness for ________ Prosecution / Defence / Court

Name : ஜெயமஞ்சு

Father's Name : த/பெ. சிவசுப்பிரமணியம்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th **day of January** 2025.

**முதல் விசாரணை –**

1. இந்த வழக்கு சொத்து நீலாம்பூர் கிராமத்தில் உள்ளது. அச்சொத்தானது என்னுடைய கொல்லு தாத்தா ராமனகவுண்டர், என்னுடைய தாத்தாவும் கொல்லு தாத்தாவின் மகனுமான வேலப்பகவுண்டருக்கும் என்னுடைய அப்பா சிவசுப்பிரமணியத்திற்கும், சித்தப்பா ராமகிருஷ்ணனுக்கும், அத்தைகள் காந்திமதி, சகுந்தலா, மணோன்மணி ஆகியோருககு பாத்தியப்பட்டது. மேற்படி என்னுடைய அத்தைகள் மேற்படி 14.63 ஏக்கர் அளவிளான தோப்பு சொத்தை குறித்து என்னுடைய அப்பா மற்றும் சித்தப்பாவிற்கு விடுதலை பத்திரம் ஒன்றை 2006ம் வருடம் பத்திர எண் 5212 மூலம் எழுதிக்கொடுத்துள்ளார்.

2. மேற்படி 14.63 சொத்தில் என்னுடைய தந்தை சிவசுப்பிரமணியத்திற்கு என்னுடைய சித்தப்பா ராமகிருஷ்ணனுக்கும் சரிபாதி தலா 7.31- 1/2 ஏக்கர் பங்குள்ளது. இந்த தோப்பில் 400 தென்னை மரங்கள், 250 மேற்பட்ட தெக்கு மரங்கள், 48 வேப்ப மரங்கள், 20 புளி மரங்கள், நீர் மூழ்கி 15 ஹச் பி மோட்டார் , இலவச மின்சார இணைப்பு எண் 0560041353 ஆகியவற்றை நாங்கள் கூட்டாக பார்த்துக்கொண்டிருந்தோம். என்னுடைய சித்தப்பா பாகம் பிரிவினை செய்யாமல் எங்களுக்கு தெரியாமல் 2010 ம் வருடம் பர்வதம் என்பவருக்கு 2 கிரயபத்திரங்கள் 11768, 11769 மூலம் விற்றுவிட்டார்.

3. என்னுடைய அப்பாவை தொந்தரவு செய்து எங்களுக்கு பாத்திய பட்ட சொத்தையும் கேட்டுக்கொண்டிருக்கிறார். என்னுடைய தந்தை சொத்தை காப்பற்றுவதற்காகவும், சொத்துக்களை எங்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதற்காக எங்களுடைய பெயரில் 20.07.2011 ம் தானம் பத்திரங்கள் என்னுடைய அக்கா ராஜராஜேஸ்வரி மற்றும் என்னுடைய பெயரில் எழுதிவைத்தார். 2012 ம் வருடம் பர்வதம் என்பவர் என்னுடைய சித்தப்பாவிடம் இருந்து சொத்தை வாங்கி கிரயம் பெற்றிருப்பதாக கூறி பாக பிரிவினை செய்ய வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்து இருப்பதாக நீதிமன்றத்தில் இருந்து எங்களுக்கு அழைப்பாணை வந்தது.

4. அப்பொழுது தான் பர்வதம், அவருடைய கணவர் ஈஸ்வரன், அவர்களுடைய பவர் ஏஜண்ட் ரங்கசாமி ஆகியோர் குறித்து தெரிய வந்தது. மாண்புமிகு 4 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 682/2012 தாக்கல் செய்து இருப்பது தெரிய வந்தது. அவர்கள் வாங்கிய பத்திரங்களிலேயே மொத்தமாக 400 தென்னை மரங்கள் இருப்பதாக குறி பதிவு கட்டணம் செலுத்தி இருக்கிறார்கள். மேலும் போர் மற்றும் நீர்மூழ்கி மோட்டார் குறித்தும் குறிப்பிட்டுள்ளார்கள். மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்த போதும் 400 தென்னை மரங்கள் இருப்பதாக கூறி அதற்கும் நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருக்கிறார்கள்.

5. ஈஸ்ரனும், பர்வதம், ரங்கசாமி ஆகியோர் எங்கள் நிலங்களை சுற்றி உள்ள நிலங்களை வாங்கி பிரித்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார்கள். உரிமையியல் வழக்கு தாக்கல் செய்த பின்னரும் சொத்தின் நடுவில் கல் ஊன்றி வேலி அமைக்க முற்பட்டார்கள் அவ்விபரம் மற்றவர்கள் கூறி எங்களுக்கு தெரிய வந்தது. நாங்கள் காவல் நிலையத்தில் கூறி அவர்களை தடுத்தோம். மற்றவர்கள் மூலமாக எங்களுடைய நிலம்

வேண்டுமென்று தொந்தரவு செய்தார்கள். நானும் என்னுடைய அப்பா, என் அக்கா ஆகியோர் பூர்விக சொத்து எங்களுக்கு வேண்டுமென்று கூறியதால் அவர்கள் எங்கள் சொத்திற்கான நீர்பாசனத்தை தொந்தரவு செய்தார்கள்.

6. கேபிள், பைப், மோட்டார் ஆகியவற்றை சேதப்படுத்தினார்கள். போரிற்குள் மண் மற்றும் கற்களை போட்டு அதை இயங்கவிடாமல் செய்தார்கள். உரிமையியல் வழக்கு தாக்கல் செய்தததில் இருந்து 2018 வரை அடிக்கடி இவ்வாறு சேதப்படுத்தி கொண்டிருந்தார்கள். நஞ்சப்பா ரோட்டில் உள்ள செல்வம் டேரடர்ஸ்-ல் நான் பல்வேறு முறை கேபிள், மோட்டார், பைப், பம்ப் செட், ஸ்டாட்டர், தானியங்கி ஸ்டாட்டார், பொருட்கள் வாங்கிய தொகை மற்றும் பராமரிப்பு, நீர்பாசனத்திற்கு பத்து லட்சத்திற்-கு மேல் செலவு செய்துள்ளேளன்.

7. மேற்படி உரிமையில் வழக்கில் 2019 ம் வருடம் முதல் நிலை தீர்ப்பாணை வழங்கப்பட்டது. அதில் சரிபாதியான 7.31 -1/2 எங்களுக்கும் அதே அளவு பர்வதத்திற்கும் என்று தீர்ப்பாணை பகிரப்பட்டது. அதனால் அவர்கள் இறுதி நிலை தீர்ப்பாணைக்காக மனு தாக்கல் செய்தார்கள். நீதிமன்றத்தில் இருந்து வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டார். அவரும் 25.09.2021 ல் தோப்பிற்கு வந்து ஆய்வு மேற்கொண்டார். அவர் 06.01.2022 ல் அறிக்கை தாக்கல் செய்தார். அவருடைய அறிக்கையில் சுற்றி உள்ள முட் செடிகளை அகற்றினால் சரியாக அளவீடு செய்ய இயலும் என்று கூறியிருந்தார்.

8. சொத்தினை அளவீடு செய்வதற்கு ஏற்றவாறு இருதரப்பினரும் சுத்தம் செய்து வைக்குமாறு நீதிமன்றம் 09.02.2022 ல் உத்தரவு பிறப்பித்தது. அவர்கள் எங்களுக்கு தகவல் எதுவும் கொடுக்காமாலும் வழக்கறிஞருக்கு தகவல் கொடுக்காமலும் முழு சொத்தின் முழு பலனையயும் அனுபவிக்க வேண்டுமென்று நினைத்து மொத்த சொத்திலிருந்த தென்னை, தெக்கு, வேப்ப மரம், புளிய மரங்கள் அனைத்தையும் வெட்டி எடுத்துவிட்டார்கள். தோப்பு இருப்பதால்தான் சொத்தை எனக்கு கொடுக்க மறுக்கிறீர்கள் என்றும் மரங்கள் இல்லை என்றால் என்ன செய்வீர்கள் என்று முதலிலேயே எங்களை மிரட்டி வந்தார்கள்.

9. என்னுடைய தாயாருக்கு இரு கண்களிலும் அறுவை சிகிச்சை செய்து இருந்தால் நான் தோப்பின் பக்கம் செல்ல இயலவில்லை. அதன் பின்னர் 24.06.2022 ம் தேதி

என்னுடைய குடும்ப நண்பர்/அண்ணன் செங்கோட்டுவேலவன் நான் தோப்பிற்கு சென்ற போது பர்வதம், ஈஸ்வரன், ரங்கசாமி மற்றும் அவர்களுடைய ஆட்கள் இருந்தார்கள். அப்பொழுது அவர்கள் தோப்பி முழுவதையும் காலி செய்து இருந்தார்கள். தோப்பிற்குள் ஜே சி பி வண்டி பதிவு எண் 37 டிவி 8436 நந்தகுமாரின் வாகனம் வேலை செய்து கொண்டிருந்ததது. நந்தகுமார் அதை ஓட்டிக்கொண்டு இருந்தார். அவருடன் மற்றொருவரும் இருந்தார்.

10. டிரக் போன்ற வாகனத்தில் மரங்களை ஏற்றி கொண்டிருந்தார்கள். டிரக் -ன் பதிவு எண் டி என் 66 எல் 9092 ஆகும். அது பழனிச்சாமி உடையது ஆகும், பழனிச்சாமி என்பவர் மரத்தை வெட்டி எடுத்து செல்பவர் ஆவார். அவருடைய ஆட்கள் நிறைய பேர் இருந்தார்கள். அதன் புகைப்படங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கு நிலுவையில் இருக்கும் போது எங்கள் யாருக்கும் தகவல் கொடுக்காமல் ஏன் இவ்வாறு செய்கீறிர்கள் என்று கேட்டதற்கு என்னை தகாத வார்த்தையால் திட்டினார்கள். எங்களுக்கு சரிபாதி பங்கு இருப்பதாக கூறியதற்கு நீ ஒரு பெண் என்றும் உனக்கு துணைக்க யாரும் இல்லை என்றும் உன்னால் முடிந்தததை பார் என்றம் கூறினார்கள்.

11. நீ வெளியில் வந்தாலே கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள் என்னை வெளியல் செல்லுமாறு மிரட்டினார்கள். நீ இங்கு வந்ததால் உனக்கும் இந்த நிலைமைதான் என்று மிரட்டினார்கள். நான் காவல் நிலையத்திற்கு செல்வேன் என்றும், நீதிமன்றத்திற்கு செல்வேன் என்றும் கூறியதற்கு நீ எங்கு வேண்டுமானலும் செல் என்றும் அவர்களுக்கு அரசியல் பலம் உள்ளது என்றும் மிரட்டினார்கள். என்னை அடிப்பது போல் வந்ததால் நான் வெளியில் வந்து விட்டேன். அந்த அண்ணனும் இங்கே இருக்க வேண்டாம் வெளியே போலாம் என்று கூறினார்.

12. 24.06.2022 ம் தேதியன்று சூலூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். பலமுறை அணுகியும் அவர்கள் வழக்கு பதிவு செய்யயவில்லை. இறுதியாக 01.07.2022 ம் தேதியன்று காவல் ஆய்வாளர் விசாரித்தார். பழனிச்சாமி மற்றும் நந்தகுமார், அவர்ளுடைய ஆட்கள் மற்றும் ஜெ சி பி ஆகியவற்றை காவல் நிலையத்திற்கு வரவழைந்து விசாரணை செய்தார்கள். அன்றைய தினம் முழுவதும், மறுநாள் மதியம் வரை அவர்களை இருக்க வைத்துவிட்டு பர்வதம், ஈஸ்வரன் அதிகாரத்தினால் அவர்களை வெளியில் விட்டு விட்டார்கள். முறையாக விசாரணை செய்யயவில்லை.

13. எவ்வித நடவடிக்கையும் எடுக்கததால் ஐ ஜி அலுவலகதத்தில் 11.07.2022 ல் புகார் அளித்தேன். அதே தேதியில் எவ்வித விசாரணையும் செய்யாமல் சூலூர் காவல் நிலையத்தில் மனு ஏற்பு ரசீது 637/2022 வழங்கினார்கள். மீண்டும் 13.08.2022 ம் தேதி எஸ்பி அலுவலகத்தில் புகார் அளித்தேன். காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கதால் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தை அணுகி சி ஆர் பி நம்பர் 26523/2022 தாக்கல் செய்தேன். மாண்புமிகு உயர் நீதிமன்றம் தனிநபர் புகார் அளிக்குமாறு உத்தவிட்டார்கள். எங்களுடைய தானபத்திரங்களிலும் மேற்படி மரங்கள் இருப்பது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

14. மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் தாக்கல் செய்துள்ளேளன். ஒரு அரசாங்கம் 1 தென்னை மரத்திற்கு இழப்பீடு தொகை 1 லட்சம் தருகிறார்கள். தேக்கு நன்கு விழைந்த மரமாகும். உரிமையியல் வழக்கு நிலுவை இருக்கும் போது எனக்கு இரண்டரை கோடி வரை இழப்பு ஏற்படும் வகையில் அவர்கள் குற்ற செயலில் ஈடுபட்டு இருப்பதால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து தண்டனை பெற்று தருவதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2025.01.10 18:00:11 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**
**சூலூர்**